## திருத்தப்பட்டது.

**செ.வெ.எண்: 37** **நாள்:31.08.2020**

# அரியலூர் மாவட்டம்
# வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (31.08.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, சமூக நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், அத்திட்டங்கள் மூலம் பயன்பெற்று வரும் பயனாளிகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், பட்டா மாறுதல் நடவடிக்கைகள் விரைந்து முடிக்கவும், அம்மா இருசக்கர வாகனம் தகுதி அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கவும், மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு கடன் வசதிகள் ஏற்படுத்தி தரவும், சாலை வசதிகள், தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்கு அறிவித்த திட்டங்கள் முறையாக கிடைக்கப் பெறுகிறதா, வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் செயல்படுத்துதல் மற்றும் விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள் திட்டங்கள் குறித்தும், சமூக நலத்துறையின் மூலம் திருமாங்கல்யத்திற்கு தங்கம் மற்றும் நிதியுதவி வழங்கும் திட்டங்கள் தகுதியான நபர்களுக்கு விரைந்து கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

**இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது :-**

பொதுமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு வகையான மக்கள் நல திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டங்கள் மூலமாக பொதுமக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும்.

மேலும், தற்போது உலக முழுவதும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் உள்ள சூழ்நிலையில் அதனை கட்டுப்படுத்திட மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. இக்சூழ்நிலையில் அரசின் திட்டங்களை பொதுமக்களிடையே பாதுகாப்பான முறையில் அரசு அலுவலர்கள் கொண்டு செல்ல வேண்டும். மேலும், அரசு அறிவிக்கின்ற அனைத்து திட்டங்களையும் தகுதி வாய்ந்த அனைத்து நபர்களும் பயனடையும் வகையில் பணியாற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னூலாப்தீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**